செ.வெ.எண்: 09 நாள்: 05.02.2018

## தமிழ்நாடு முழுவதும் அம்மா ஆரோக்கியத் திட்டம் மூலம் இதுவரை 33 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பரம்பூரில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (05.02.2018) துவக்கி வைத்தார்.

இம்மருத்துவ முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். பரம்பூரில் ரூ.5.98 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டடத்தை திறந்து வைத்தார். மேலும் அருள்மிகு அகஸ்த்தீஸ்வர சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழாவிலும் கலந்து கொண்டார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பரம்பூரில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு மருத்துவ முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பு மருத்துவ முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. முதல் முறையாக 30 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் 25 வகையான பரிசோதனைகள் செய்யக்கூடிய அற்புதமான திட்டம் அம்மா ஆரோக்கியத் திட்டம் ஆகும். தமிழ்நாடு முழுவதும் 535 மையங்களில் அம்மா ஆரோக்கியத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 33 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். 30 வயதிற்கு மேல் உள்ள ஆண், பெண் இருபாலருக்கும் 25 வகையான பரிசோதனைகளும் கட்டணமில்லாமல் செய்வதே அம்மா ஆரோக்கியத் திட்டம் ஆகும். இன்று நடைபெறும் இந்த சிறப்பு மருத்துவ முகாமிலும் அம்மா ஆரோக்கியத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 6500 பதிவு செய்த ஸ்கேன் சென்டர்கள் உள்ளன. ஸ்கேன் சென்டர்கள் கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிவிக்கக் கூடாது. அவ்வாறு அறிவித்தால் மிகப்பெரிய குற்றமாகும். ஸ்கேன்

சென்டர்கள் தங்களது மருத்துவ பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும். ஸ்கேன் சென்டர்கள் மீது புகார்கள் வந்தால் இரகசிய ஆய்வு மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ பதிவேடுகளை முறையாக பராமரிக்காத மருத்துவமனைகளில் ஆய்வு செய்து சீல் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் தவறு செய்த 126 ஸ்கேன் சென்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஸ்கேன் சென்டர்களில் நடைபெறும் முறைக்கேடுகளை தடுக்கும் வகையில் மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக்களும் மற்றும் மத்திய அரசு கண்காணிப்புக் குழுக்களும் இருப்பதுடன் மாவட்ட அளவில் அந்தந்த இணை இயக்குநர்கள் மூலம் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளது. இவர்கள் மூலம் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு தவறு செய்யும் ஸ்கேன் சென்டர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட திட்ட அலுவலர் (ஒ.கு.வ.தி) திருமதி.புஷ்பகலா, பொதுசுகாதார துணை இயக்குநர் மரு.பரணிதரன், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத் தலைவர் திரு.பி.சாம்பசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**